**Date :** 14.12.2021.

**O.S. No.59/2015**

**பி.வா.சா.2 திரு.சுவாமிநாதன்**

**8வது தரப்பு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த எதிர்உரையில் எனது தகப்பனார் மற்றும் அத்தைகள் வாக்கரலாக பாகம் பிரித்துள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதன் அடிப்படையில் எங்களது அத்தைகளுக்கு சொத்துக்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. மேலே குறிப்பிட்ட வாக்கரால் பாகப்பிரிவினை எப்போது நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. வாக்கரால் பாகப்பிரிவினை பற்றி எனது அண்ணன் சண்முகம் கூறியதை வைத்து குறிப்பிட்டுள்ளேன். உண்மையில் எனது தந்தைக்கும் அத்தைகளுக்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

sd/-G.vijaya,
முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.